4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 111/2021 நாள்: 12.02.2026 வா.சா.1 – ஹர்சினி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு உடன் பிறந்த ஒரு சகோதரர் மற்றும் ஒரு சகோதரி உள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது குடும்பத்தை விட்டு பிரிந்து எனது தாயாருடன் கோவையில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனது தாயாருக்கு எனது சகோதரர் பாகபிரிவினை செய்து சொத்தை கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி எனது தாயாருக்கு கிடைத்த சொத்தை நானும், எனது தாயாரும் கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல, சாட்சி தற்போது விற்பனை செய்து விட்டேன், நான் தான் விற்றேன், எனது கணவர் வாங்கிய கடனுக்காக விற்றேன், எனது திருமணத்திற்காக எனது தாயார் சீர்வரிசையாக அந்த சொத்தை கொடுத்தார். நான் எனது தாயாருடன் கோவையில் குடியிருக்கும் போது எங்கள் கைவசம் நகை, பணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் நகை, பணம் கைவசம் வைத்திருந்தை காட்டுவதற்கு ஆதாரம் ஏதாவது இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். நான் பணம் கைவசம் வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்துள்ளேன். நகை வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். நான் B.Sc. Hotel Management, MFT படித்துள்ளேன் என்றால் சரிதான். கோவையில் எனக்கு வேலை தேடி நானும், எனது தாயாரும் கோவையில் குடியேறினோம் என்றால் சரிதான். பொள்ளாச்சி தாலுகா, தொண்டாமுத்துரில் உள்ள ஒரு கோவிலுக்கு நானும், எனது தாயாரும் செல்வது வழக்கம் என்றால் சரிதான்.

மேற்படி கோவிலுக்கு வரும் தொண்டாமுத்துரை சேரந்த தங்கவேல் என்பவருடன் எங்களுக்கு பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நபரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது, கோவிலுக்கு வந்த இடத்தில் எனக்கு தெரியும். மேற்படி தங்கவேலிடம் என் குடும்ப சூழ்நிலையை சொல்லியுள்ளேன். மாப்பிள்ளை இருப்பதாக சொன்னதால் நான் குடும்ப சூழ்நிலையை சொல்ல வேண்டுய சூழ்நிலை ஏற்பட்டது. மேற்படி தங்கவேல் எங்களிடம் ஒரு மாப்பிள்ளை இருக்கிறார், திருமணம் செய்து கொள்கீறீர்களா என்று என்னிடம் கேட்டாரா என்றால் சாட்சி நேரடியாக என்னிடம் கேட்கவில்லை, கோவிலில் இருக்கும் ஒரு பெண் சாமியாரிடம் அவர் சொல்லியுள்ளார்.

**பிரவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.12 17:04:08 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.